# குளித்தலை நகராட்சி

15.10.2020.ஆம் தேதி வியாழக்கிழமை மாலை 4.15 மணிக்கு
நகராட்சி ஆணையர் அறையில் நடைபெற்ற அவசரக்கூட்டம்

ம.முத்துக்குமார்,
ஆணையர் மற்றும் தனி அலுவலர்,
குளித்தலை நகராட்சி.

-------

பொருள்– 01. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட 24 வார்டுகளிலும், குடிநீர் விநியோகம் செய்யப்பட்டுவரும் குடிநீர் காவேரி ஆற்றிலிருந்து நாப்பாளையம் மற்றும் பெரியார்நகர் ஆகிய இரண்டு இடங்களில், நாப்பாளையம் நீரேற்று நிலையத்தில் 25.எச்.பி. திறன்கொண்ட இரண்டு மின்மோட்டார்கள் நிறுவப்பட்டுளளது. மேற்கண்ட மின்மோட்டார்கள் நிறுவப்பட்டு சுமார் 20 வருடங்களாக பயன்பாட்டில் இருந்து வருகிறது. இவைகளில் இடை இடையே மராமத்துப் பணிகள் செய்து இயக்கப்பட்டு வருகிறது. இதைப்போன்று பெரியார்நகர் தலைமை நீரேற்று நிலையத்தில் இரண்டு 33.எச்.பி. மின்மோட்டார் பொருத்தப்பட்டு இயக்கப்பட்டு வருகிறது. இவை இரண்டும் டெக்கான் வகையை சார்ந்தது. இவைகளும் தன் முழு குதிரை திறன் இல்லாததால் தண்ணீர் ஏற்றுவதில் சிரமம் ஏற்படுவதால், மின் நுகர்வும் கூடுதலாக எடுத்துக்கொள்கின்றது. இதன் பொருட்டு கூடுதல் செலவினம் நகராட்சிக்க ஏற்படுகிறது. மின்மோட்டார் நிறுவப்பட்டு சுமார் 20 வருடங்கள் கடந்த நிலையில், இரண்டு தலைமை நீரேற்று நிலையத்திலும் உள்ள மின்மோட்டார் புதிதாக பொருத்தி பொதுமக்களுக்கு தடையின்றி குடிநீர் விநியோகம் பணி மேற்கொள்ள ஏதுவாக 33.எச்.பி. மற்றும் 25.எச்.பி. மின்மோட்டார்கள் கொள்முதல் செய்ய உத்தேச செலவுத் தொகை ரூ.8.00 இலட்சத்திற்கும், ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கும் நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட செலவினத்தை 2020–2021.ம் ஆண்டு நிதியில் ஈடுசெய்யவும் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1343/2020/இ1)

பொருள்– 02. குளித்தலை நகராட்சி 24 வார்டுகளை உள்ளடக்கி 11.16 ச.கி.மீ. சுற்றளவினை கொண்டதாகவும், நகரில 1422 மின் கம்பங்களில் பொருத்தப்பட்டுள்ள மின் விளக்குகள் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. நகரின் தன்மை மிகவும் நீளமான நகராக இருந்து வருகிறது. இதனால் இந்த 1422 மின் கம்பங்கள் மற்றும் அலுவலகம், கடைகள், குடிநீர் பணிகளுக்கு பயன்படுத்தப்பட்டுவரும் நீர் உந்து நிலையம் தெருக்களில் உள்ள மின் பவர் பம்புகள் இவைகள் அனைத்துப் பணிகளையும் பராமரிப்பு செய்வதற்கு ஒரு மின் பணியாளர், ஒரு மின் கம்பியாளர் மற்றும் ஒரு உதவியாளர் இவர்களைகொண்டு அன்றாட பணிகளை கவனித்து வருவதால், குறித்த நேரத்தில் மின்விளக்குகளை எரியவிடுவதற்கும், அனைப்பதற்கும் மிகுந்த காலதாமதம் ஏற்படுகிறது. இதன்பொருட்டு, மின்சார செலவினம் கூடுதலாக அதிக வாய்ப்பு ஏற்படுகின்றது. இந்நிலையில் தானியங்கி சுவிட்சஸ் பொருத்தினால், காலையிலும், மாலையிலும் குறிப்பிட்டநேரத்திற்கு அனைத்து பகுதிகளிலும் ஒரே நேரத்தில் On and Off செய்வதன்மூலம் மின் நுகர்வு அளவு குறைவதுடன் மின் கட்டண தொகை குறைய அதிக வாய்ப்பு என்பதால், ஒவ்வொரு சுவிட்சும் 2000 வாட்ஸ் குறைவில்லாமல் 84 எண்ணிக்கையில் பொருத்தவும், மும்முனை இணைப்புகள் 2 எண்ணங்கள் உயர் மின்கோபுர விளக்குகள், ஆகமொத்தம் 86 எண்ணிக்கை கொண்ட சுவிட்சுகள் ஒப்பந்தப்புள்ளி கோரி பொருத்துவதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.9,23,000/–க்கு செலவினத்திற்கும், பணியினை மேற்கொள்ளவும் நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அனுமதிக்கலாம்.
2). 2020–2021ஆம் ஆண்டு நிதிநிலையில் செலவினத்தை ஈடுசெய்ய அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1405/2020/இ1)

..2..

பொருள்– 03. குளித்தலை நகராட்சி கரூர் மாவட்ட எல்லைக்குட்பட்ட பகுதியில் அமைந்துள்ளது. இந்நகராட்சிக்கு நான்கு திசைகளில் இருந்தும் பொதுமக்கள் மற்றும் வாகன போக்குவரத்து இருந்து வருகிறது. இந்நகராட்சியின் எல்கை குறித்தான பலகை இல்லாத காரணத்தால், நகர எல்லை ஆரம்பம் மற்றும் முடிவு தெரிந்துகொள்ள ஏதுவாக வரவேற்பு மற்றும் நன்றி தெரிவிக்கும் பெயர் பலகை நான்கு அமைப்பதற்கு அவசியம் என்பதால், ஒளிரும் பெயர் பலகை அமைக்க உத்தேச செலவுத் தொகை ரூ.3.45 இலட்சம் ஆகும். எனவே, பணியினை செய்யவும் செலவினத்திற்கும் நகர் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட செலவினத் தொகையை 2020–2021ம் ஆண்டு நிதி நிலையில் ஈடுசெய்ய அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1307/2020/இ1)

பொருள்– 04. குளித்தலை நகராட்சிக்குட்பட்ட 5வது வார்டு விஸ்தரிப்பு பகுதி மணப்பாறைரோடு இந்நகரத்திற்குள் சென்றுவருவதற்கு மெயின் சாலையாக இருக்கிறது. பொதுமக்கள் அதிகம் பயன்படுத்தும் சாலையாக இருப்பதால், பொது மக்களின் நலன்கருதி, இச்சாலையில் மின்விளக்குகள் அதிகம் தேவைப்படுவதால், ரயில்வேகேட் முதல் கோட்டமேடு பாலம் வரையில் புதிதாக 2 தெரு மின் இணைப்புகள் மின்மாற்றியின் வடபகுதியில் ஒரு இணைப்பும், தென்பகுதியில் ஒரு இணைப்பும் பெற்று புதியதாக 26 தெரு மின் விளக்குகள் பொருத்துவதற்கு தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.1,70,000/க்கு செலவினத்திற்கும் பணியினை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அனுமதிக்கலாம்.
2). 2020–2021ஆம் ஆண்டு நிதிநிலையில் செலவினத்தை ஈடுசெய்ய அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1242/2020/இ1)

பொருள்– 05. குளித்தலை நகராட்சி பெரியார்நகர் பகுதிகளுக்கு (வார்டு எண்.10–24) குடிநீர் விநியோகம் செய்வதற்கு காவேரி ஆற்றிலிருந்து மின்மோட்டார் மூலம் குடிநீர் பெறப்பட்டு மேல்நிலை தொட்டியில் நீரேற்றம் செய்து விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி மின்மோட்டார் அறையின் கூரை மிகவும் சேதமடைந்துள்ளது. மழை காலங்களில் நீர் அறைக்குள்ளேயே வந்து தங்கமுடியாத நிலையில் இருந்து வருகிறது. இதனால், மழைகாலங்களில் மின் கசிவு ஏற்பட்டு விடுமோ என்ற பயத்துடன் மிகவும் சிரமமாக இருப்பதாலும், மேற்படி அறையானது மின்சார மோட்டார் இரண்டு எண்ணம் 33 எச்.பி. பயன்பாட்டில் இருந்து வருவதாலும், பாதுகாப்பினை கருதி மேற்படி அறையினை புதுப்பித்தும், ஜெனரேட்டர் திறந்த வெளியில் உள்ளதை பாதுகாக்க கூரை அமைக்கவும் அவசியமாகிறது. எனவே, மேற்கண்ட பணிகளை செய்ய தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு– 1). அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட செலவினத்தை 2020–2021.ம் ஆண்டு செலவு நிதியில் ஈடுசெய்யவும் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1459/2020/இ1)

பொருள்– 06. குளித்தலை நகராட்சியில் பணிபுரியும் தூய்மை பணியாளர்கள், துப்புரவு மேற்பார்வையாளர்கள், அலுவலக உதவியாளர்கள் மற்றும் மின் பணியாளர்கள், ஓட்டுநர்களுக்கு 2020–2021ஆம் ஆண்டுக்கான சீருடைகள் வாங்குவதற்கு, அரசாணை எண்.60, நாள்–03.03.20216இன்படி, Tamil Nadu Textile Corporation Ltd., Coimbatore அரசு சார்பு நிறுவனத்திடம் பணியாளர்களுக்கு சீருடை வாங்கி வழங்குவதற்கும் மற்றும் தையல்கூலி பணியாளர்களுக்கு வழங்குவதற்கும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,50,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1465/2020/எச்1)

பொருள்– 07. குளித்தலை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்கள் ஒன்று முதல் ஒன்பது வரை அனைத்து பகுதிகளுக்கும் குடிநீர் விநியோகம் காவேரி ஆற்றின் கரையில் நீர் உறிஞ்சும் கிணறு அமைத்து மின்மோட்டார்மூலம் பம்பிங்செய்து, நாப்பாளையம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியில் நீரேற்றம் செய்து, பின்பு விநியோகம் செய்யப்படுகிறது. இந்நிலையில் பம்பிங் செய்யப்படும் இடத்தில் மின்மோட்டார் அறை மற்றும் ஜெனரேட்டர் இவைகள் எல்லாம் காவேரி கரையிலேயே அமைந்துள்ளது. பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கக்கூடிய இடம் என்பதால் பாதுகாப்பு மிகுந்த இடமாக இருக்க வேண்டியது. மின்மோட்டார் அறையின் முன்புறத்தில் அமர்ந்து மது பிரியர்கள் மற்றும் சமூக விரோதிகள் சுற்றுச்சுவர் இல்லாத காரணத்தால், பல தகாத செயலில் ஈடுபடுகின்றனர். எனவே, காவல்துறை மூலம் நடவடிக்கையும் எடுத்து பார்த்தாயிற்று. எவ்வித பலனும் இல்லை. எனவே, மேற்படி மின்மோட்டார் அறையை சுற்றி கான்கிரீட் தூண் அமைத்து, கம்பிவேலி அமைத்து பாதுகாக்கவும், ஜெனரேட்டர் மழையிலும், வெயிலிலும், திறந்த வெளியில் இருக்கிறது. அதனை பாதுகாப்பு கருதி கூரை அமைத்து பாதுகாக்கவும் வேண்டியது மிகவும் அவசியம் கருதி, மேற்கண்ட பணியினை செய்ய தயார் செய்யப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.5,00,000/–க்கு நகர்மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–
1). மன்றம் அனுமதிக்கலாம்.
2). மேற்கண்ட செலவினத்தை 2020–2021.ம் நிதி ஆண்டில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1460/2020/இ1)

பொருள்– 08. குளித்தலை நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு, வடகிழக்கு பருவமழையினை எதிர்நோக்கியும், அன்றாடம் நகரினை தூய்மையாக வைத்துக்கொள்ள தேவையான தளவாட பொருள்கள் 2020–2021ஆம் ஆண்டுக்கான அவசர அவசியம் கருதி கூட்டுறவு சங்கத்தின்மூலம் வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,00,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு– மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.1476/2020/எச்1)

பொருள்– 09. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பேருந்து நிலையம், அம்மா உணவகம் மற்றும் நகராட்சி அலுவலகம் இவை மூன்று இடங்களிலும் பொதுமக்கள் அதிகம் பயன்படுத்தப்பட்டுவரும் இடங்களாகும். இந்த இடங்களில் கூடும் மக்கள் குடிப்பதற்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வைக்க நடவடிக்கை மேற்கொண்டு பயன்பாட்டில் இருந்துவந்த நிலையில் சுமார் ஒரு வருடங்களுக்கு மேலாக பயன்பாடில்லாமல் பயன்படுத்தவும் முடியாமல் இருந்துவந்த நிலையில் பொதுமக்கள் நலன் விரும்பி ஒருவர் திருப்பூர் அவர்கள், பேருந்து நிலையங்களில் குடிநீர் வைக்க வேண்டி முதலமைச்சர் தனிப்பிரிவிற்கு விண்ணப்பம் செய்துள்ளார். அதனடிப்படையில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்கள் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் அவர்கள், உடனடியாக அதனை சரிசெய்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவருவதற்கு உரிய நடவடிக்கைகள் அறிவுறுத்தப்பட்டுள்ளது. பயன்பாட்டில் இருந்தவந்த மின்கலன்கள் மற்றும் இதரப் பொருட்கள், பிளாஸ்டிக் பொருட்கள் என்பதால், திரும்ப விலைக்கு எடுத்துக்கொள்ள இயலாது என்று கூறியதால், அனைத்துப் பொருட்களும் புதிதாக மாற்றம் செய்து வழங்குவதற்கு உத்தேச செலவுத் தொகை ரூ.2.65 இலட்சத்துக்கு மேற்கண்ட பணியினை செய்வதற்கும், செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு–
1). அனுமதிக்கலாம்.
2). செலவினத்தை 2020–2021ஆம் ஆண்டு நிதி கணக்கில் ஈடுசெய்யலாம்.
(ந.க.எண்.1494/2020/இ1)

*******

# குளித்தலை நகராட்சி

15.10.2020.ஆம் தேதிய அவசரக்கூட்டத் தீர்மானங்களின் உண்மைநகல்

| வ. எண். | பொருள் எண். | தீர்மானம் எண். | தீர்மான விபரம் |
|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) |
| 1 | 1 | 79 | அனுமதிக்கப்பட்டது. |
| 2 | 2 | 80 | அனுமதிக்கப்பட்டது. |
| 3 | 3 | 81 | அனுமதிக்கப்பட்டது. |
| 4 | 4 | 82 | அனுமதிக்கப்பட்டது. |
| 5 | 5 | 83 | அனுமதிக்கப்பட்டது. |
| 6 | 6 | 84 | அனுமதிக்கப்பட்டது. |
| 7 | 7 | 85 | அனுமதிக்கப்பட்டது. |
| 8 | 8 | 86 | அனுமதிக்கப்பட்டது. |
| 9 | 9 | 87 | அனுமதிக்கப்பட்டது. |

ஒம்/—ம.முத்துக்குமார்,
ஆணையர் மற்றும் தனி அலுவலர்,
குளித்தலை நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையர்,
குளித்தலை நகராட்சி.